**எம்பிலிபிட்டிய நகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 13 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து எம்பிலிபிட்டிய நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காகச் செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 12,488,419 ஆக இருந்த போதிலும், ரூபா 13,810,213 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக கடன்கொடுத்தோர் ரூபா 1,321,794 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு அபிவிருத்தி நிதியத்தின் மீதி ரூபா 16,677,054 ஆக இருந்த போதிலும் அது ரூபா 16,446,902 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ரூபா 230,152 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மாகாண சபைகள் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 8,659,468 கூட்டுத்தொகையானது கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கணக்குகளுக்கிடையே மாத்திரம் சீராக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் மூலதனச் செலவினம் மற்றும் மூலதனப் பெறுவனவுகள் என்பன சமமான பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிகளுக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 1,621,936 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 2,320,011 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானம் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (அ) நிதிப்பிரமாணம் 371(2) | 937,291 | 2007 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 13 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட முற்பணம் சீராக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 1,507,131 | 2004 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய நானாவித வைப்புக்கள், கேள்விப் பிணை, 10 சதவீத நிறுத்திவைத்தல், மீளச் செலுத்த வேண்டிய ஒப்பந்தப் பிணை மற்றும் நிர்மாண ஒப்பந்த பிணை என்பன தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,526,973 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,044,356 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 18,206,000 | 18,329,258 | 16,053,437 | 37,300,469 | 18,010,200 | 17,750,100 | 19,796,209 | 29,726,104 |
| வாடகை | 14,199,900 | 14,467,062 | 12,977,626 | 10,749,251 | 11,568,900 | 14,438,308 | 11,481,415 | 9,004,935 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,777,800 | 2,303,439 | 2,052,639 | - | 2,328,800 | 3,381,968 | 2,437,101 | - |
| ஏனைய வருமானம் | 6,388,200 | 19,160,471 | 14,510,896 | 14,064,980 | 8,146,950 | 15,126,156 | 7,036,628 | 15,556,166 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானம் என்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட முறையே 15 சதவீதத்தாலும், 239 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன் வீதவரியும் வரியும், வாடகை வருமானம், சேவைகளுக்கான கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட முறையே 12 சதவீதம், 09 சதவீதம், 06 சதவீதம், 08 சதவீதம் மற்றும் 27 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 2.2.3 ஆதன வரி

2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 37,300,469 தொகையான அறவிடவேண்டிய ஆதனவரி மீதியொன்று காணப்பட்டதுடன் நிலுவை ஆதனவரியை அறவிடல் தொடர்பான சபையின் செயற்படு நிலை நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பள்ளேகம பொதுச் சந்தையில் அமைந்துள்ள 27 கடைகளிலிருந்து 2012 மார்ச் முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 415,900 கூட்டுத்தொகையான வாடகை 2018 மே வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பள்ளேகம பேரூந்து நிலையத்தில் அமைந்தள்ள 40 தற்காலிக கடைகளில் 15 கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 32 கடைகளுக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 3,582,741 நிலுவை வாடகை அறவிட வேண்டியிருந்தது.

(இ) நீண்ட காலம் முதல் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 10,579,416 கூட்டுத்தொகையான வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் முடியாதிருந்தது.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறாதிருந்த கைத்தொழில்களை கண்டறிவதற்காக சபையினால் முறையான திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட வேண்டிய 11 வியாபார நிலையங்கள் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காமையின் காரணமாக சபைக்கு ரூபா 48,400 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்ததுடன் அந்த வியாபாரங்களை நடாத்திச் செல்லும் போது ஏற்படக்கூடிய சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பாக காலரீதியில் மதிப்பீடொன்று இடம்பெறாமையின் காரணமாக சபை அறிக்கைப் பிரதேசத்தில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக சபையின் பொறுப்புக்கள் போதியளவான பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 ஏனைய வருமானம்**

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2018 சனவரி வரையில் 29 முச்சக்கர வண்டி தரிப்பிடங்கள் சபையால் இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த இடங்களில் நிறுத்தப்பட்டுள்ள இனங்காணப்பட்ட 135 முச்சக்கர வண்டிகள் 2017 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்படாமையின் காரணமாக சபைக்கு ரூபா 67,500 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) பேரூந்து தரிப்பிடத்திற்கு நுழைகின்ற பேரூந்துகளிலிருந்து கட்டணம் அறவிடுவது தொடர்பாக சபை போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருந்த 15 நிலையான அறிவித்தல் பாதாகைகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 68,578 தொகையான கட்டணத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

**2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 யூலை முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 1,761,690 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 12,303,290 கூட்டுத்தொகையான முத்திரை வரி அறவிடவேண்டியதாகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**ஊழியர் கடன்**

2014 ஒக்தோபர் 03 அந் திகதி வேலை நீக்கத்திற்குள்ளாகிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 127,206 தொகையான நிலுவைக் கடன் மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 பெப்ரவரி 21 ஆந் திகதிய பொது சபைக் கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் நிலுவை ஆதனவரியைச் சேகரிப்பதற்கு நியமிக்கப்பட்ட நடுக்கட்டல் உத்தியோகத்தருக்கு மிகைக் கட்டணத்திலிருந்து 15 சதவீத தரகுப் பணம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும், நிலுவை ஆதன வரி பெறுமதி சரியாக பட்டியல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக தரகுப் பணம் செலுத்தும் அடிப்படையை சரியாகக் கண்டறிவதற்கு முடியாமையினால் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை கூட்டுமொத்தமாக ரூபா 237,012 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் வரையிலும் அதில் ரூபா 41,546 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற கைத்தொழில் உதவிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,005,930 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையில் பொது வைப்புக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய அநகாரிக தர்மபால சிறுவர் பூங்கா நாளதுவரையாகப் பேணப்படாதிருந்தமை மற்றும் பூங்காவிற்காக நீர் வசதிகள் மற்றும் மலசலகூட வசதிகள் வழங்கப்படாமை பிரதான நட்டமொன்றாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் மூலம்

வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், உரிய வசதிகளை வழங்கி பூங்காவை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது நாலகத்தில் சிவிலிம் உடைந்த நிலையில் காணப்பட்டமை மற்றும் அதன் இட அளவுகள் போதியளவில் இல்லாதிருந்தமை 2016 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த சிபாரிசுகள் 2018 சனவரி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) திரு தர்சனகம குமார அவர்களின் வீட்டு வீதிக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்தல்**

(i) மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 1,953,901 தொகையான மேற்கூறப்பட்ட வேலையின் ஆரம்ப மதிப்பீட்டின் வேலை விடய இலக்கம் 02 இன் கீழ் நிறைவேற்ற வேண்டிய அளவு 17,823.5 சதுர மீற்றராக இருந்த போதிலும் உள்ளபடியான அளவு 1,965 சதுர மீற்றர் ஆனமையால் 15,858.5 சதுர மீற்றருக்காக ரூபா 515,401 மிகை மதிப்பீடு செய்யப்பட்டமையால் தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீடு பொருத்தமானதாக இருக்கவில்லை.

(ii) உரிய வீதிக்கு 414.5 சதுர மீற்றர் நீளத்திற்கு தார் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், வேலை விடய இலக்கம் 02 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட மிகை மதிப்பீடு வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் அந்தப் பணத்தைப் பயன்படுத்தி உரிய வீதிக்கு 519 மீற்றர் நீளத்திற்கு தார் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், அதற்காக திருத்தப்பட்ட மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கிராமியத் தலைவர்களுக்கு பயிற்சியளிக்கும் நிலையத்திற்கு அருகிலுள்ள வீதிக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்தல்**

மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 531,472 தொகையான கிராமிய தலைவர்களுக்கு பயிற்சியளிக்கும் நிலையத்திற்கு அருகிலுள்ள வீதிக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்யும் வேலை 2017 மே 15 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அந்த வீதி 2017 திசெம்பர் 21 ஆந் திகதி பரீட்சித்து நல்ல நிலையில் உள்ளதாகவும் அதற்கான நிறுத்தி வைத்தல் பணம் மற்றும் ஒப்பந்தம் பிணைகளை செலுத்துதல் பொருத்தமானது என தொழில்நுட்ப உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், 2018 சனவரி 11 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது வீதி மேற்பரப்பு முழுமையாக பழுதடைந்து காணப்பட்டதுடன் சில இடங்களில் வெடித்துச் சிதறியிருந்தது. வீதிக்கு இரண்டாம் தடவை தார் இடும் போது உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படாமை இந்த நிலைமைக்கு காரணமாக இருந்ததுடன், அது விதியின் இருப்புத் தொடர்பில் நேரடியாகத் தாக்கத்தைச் செலுத்துகின்றமையால் இந்த வீதி அபிவிருத்திக்காகச் செலுத்தப்பட்டுள்ள ரூபா 512,376 செலவினம் பயனற்றதாக இருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 19 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 53,189,500 தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளத்திற்காக மீளாய்வாண்டிற்காக ஏற்படுத்தப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 1,000 ஆக இருந்த போதிலும், செலவினம் ரூபா 101,908 ஆனமையால் நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 100,908 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) செலவினங்கள் இனங்காணப்படாமை |
| | (ii) வருமானம் குறைத்து பதியப்பட்டமை |
| | (iii) பேரேட்டுக் கணக்குகளும் பட்டோலைகளும் இணங்காமை |
| | (iv) செலவினப் பேரேடு நிதிக்கூற்றுக்களுடன் இணங்காமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |

| | | |
|---|---|---|
| (இ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | நாளதுவரையாகப் பேணப்படாமை |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | நிறைவேற்றப்படாத பணிகளுக்காக கொடுப்பனவு செய்தமை |
| (உ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| | | (ii) நிதிஏற்பாட்டை விஞ்சி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டமை |